## *புனித ஒடிலியா*

இவளுடைய தந்தையின் பெயர் அதால்ரிக். அவர் ஒரு சிற்றரசர். இவர் அல்சாஸ் நாட்டில் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தார். ஒடிலியா இருகண் குருடாய்ப் பிறந்தாள். இதைக் கண்ட தகப்பன் கடும் கோபம் கொண்டு இவளை வெளியே போட்டு விட்டார். பர்கண்டி நாட்டில் ஒரு மடத்தில் வாழ்ந்த கன்னியர்கள் இவளை எடுத்து வளர்த்து வந்தார்கள். இவளுக்கு வயது பன்னிரண்டு ஆயிற்று. இன்னும் ஞானஸ்நானம் பெற வில்லை. அந்த சமயத்தில் கடவுள், எபெரார்ட் என்னும் புனிதருக்குத் தோன்றி, “குருடியாய்ப் பிறந்த சிறுமி ஒருத்தி மடமொன்றில் வாழ்ந்து வருகிறாள். ஞானஸ்நான நீர் இன்னும் அவளது ஆன்மாவைச் சுத்திகரிக்கவில்லை. நீர் அவளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து ஒடிலியா என்னும் பெயரைக் கொடுப்பீராக. ஒளியின் மகள் என்பதே அப்பெயரின் பொருள். ஞானஸ்நானம் பெற்றதும் அவள் கண்பார்வை பெறுவாள்” என்றார். இப்புனித ஆயர் அவ்விதமே செய்து சிறுமியின் கண்களில் புனித தைலத்தைத் தடவினார். உடனே அவள் கண்பார்வை பெற்றாள்.

இவளுடைய தந்தைக்கு இன்னொரு பெண்ணும் நான்கு ஆண் மக்களும் பிறந்தார்கள். மகன் ஒருவன் தன் அக்கா ஒடிலியாவைப் பார்க்க விரும்பினான். இரகசியமாக கடிதம் எழுதி அரண்மனைக்கு அவளைக் கூப்பிட்டான். சிறுமியும் சென்றாள். அவள் வருவதைக் கண்ட தந்தை. அவளை வரவழைத்த தன் மகனை முரட்டுத்தனமாக அடித்தான். சிறுவன் நினைவு இழந்து கீழே விழுந்தான். ஒடிலியா முழந்தாளிட்டு தன்தையின் கரத்தை முத்தமிட்டாள். தந்தையின் மனது இளகியது. மகளை அவரணைத்தான். அதிலிருந்து அரண்மையில் எல்லோரும் அமைதியாக வாழ்ந்தார்கள்.

ஒடிலியா துறவியாக விரும்பினாள். தந்தைக்கு அவளை விட்டுப் பிரிய மனமில்லையென்றாலும் ஓர் அரண்மனையை நன்கொடையாக கொடுத்தான். அவள் அதை கன்னியர் மடமாக மாற்றினாள். பல கன்னியருடன் அங்கு வாழ்ந்து புனிதையாக இறந்தாள்.

**சிந்தனை:**

ஞானஸ்நானம் பெற்றதும் இவள் கண்பார்வை பெற்றாள். ஞானஸ்நானம் இதே உதவியை நம் ஆன்மாவுக்கும் செய்யக் கூடும்.

**செபம்:**

ஆண்டவரே, ஆன்ம குருடர்கள் அனைவரும் கண்பார்வை பெறச் செய்தருளும்.